# இலங்கைக்கான தேசீய ஒருமைப்பாடும் சமாதானமும் சமாதான அரசியல் பற்றி ஒரு நோக்கு.

கே.ரி.கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு நீண்ட வரலாற்றைக் கொண்டது. தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு உடன்பாடுகளும் தந்திரமான அரசியல் கையாளுகைக்கான திட்டமிடல்களாக மட்டுமே அமைந்திருந்தன. இக்கையாளுகை அரசியல் இனங்களுக் கிடையிலான தேசீய ஒருமைப்பாட்டை சிதைத்து முரண்பாட்டுக்கும், பிரிவினைக்கும் வித்திட்டன. இம்மாறுதலின் வளர்ச்சிக்கட்டத்தில் மீண்டுமொரு சமாதான அரசியலும், உடன்பாடும் உருவாகியதுடன் தேசீய ஒருமைப்பாடு பற்றிய சிந்தனை முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது.*

**அறிமுகம் :**

இலங்கையின் இனப்பிரச்சினைக் கான தீர்வை நோக்கிய நகர்வில் சமாதானம் நிலையான ஒன்றானதாக இதுவரையும் இருந்ததில்லை. இலங்கையின் இன முரண்பாட்டுக்கான அரசியல் வரலாற்றை உற்றுநோக்கினால் அதனை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். அப்புரிதல் பண்டா – செல்வா உடன்படிக்கையெனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட காலம் சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவிற்கும் காலம் சென்ற எஸ்.ஜெ.வி.செல்வநாயகத்திற்கும் இடையில் இனமுரண்பாட்டுக்கான தீர்வாக 1957ஆம் ஆண்டு செய்யப்பட்ட உடன்படிக்கை யிலிருந்து ஆரம்பமானது. ஆனால் அவ்வுடன் படிக்கையை எதிர்க்கட்சியாக அப்போதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் மேற்கொண்ட கண்டி பாதயாத்திரையின் ஊடாக முடிவுக்கு வந்தது. அது மாத்திரமல்ல பிக்குமார்கள் ஊர்வலமாகச் சென்று பண்டாரநாயக்காவின் உத்தியோக வாசஸ்தலத்தில் அதனைக் கிழித்தெறியும்வண்ணம் சத்தியாக்கிரகம் செய்தனர். இத்தகைய அரசியல் வரலாறு டட்லி – செல்வா உடன்பாடு, இலங்கை இந்திய உடன்பாடு என விரிவடைந்ததுடன் 21ஆம் நூற்றாண்டின் அரசியல் தலைமைகள் என வர்ணிக்கப்படும் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பண்டாரநாயக்கா மற்றும் ரணில் விக்கிரமசிங்க காலத்திலும் நீடிப்பதாகக் காணப்படுகின்றதென்ற விமர்சனமும் முன்வைக்கப்படாமல் இல்லை. ஆனாலும் இலங்கையின் தேசீய ஒருமைப்பாடு என்ற நோக்குடன் எழுச்சியடைய வேண்டிய பன்மைச் சமூகக்கட்டமைப்பு இலங்கையின் இனப்பிரச் சினைக்கான தீர்வாக முன்வைக்கப்படாது ஒற்றையாட்சிக்கட்டமைப்புக்குள் தீர்வற்ற நெகிழ்ச்சி அரசியல் தந்திரமாக கையாளப்படு கின்றது. இதன் தொடர்ச்சியாக 2001ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணையாளரின் ஒத்துழைப்புடன் ஆரம்பமான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கான காரணிபோர்நிறுத்த உடன்பாட்டையும், சமாதானமான தேசத்தையும் அமைப்பதற்கான புதிய உபாயத்தையும் கொண்டதாக விளங்குகிறது.

### தேசிய ஒருமைப்பாடு

தேசிய ஒருமைப்பாடு என்ற இப்பகுதி முழுமையாக அரசியல் ஒருமைப்பாட்டுக்கான பரிமாணமாகவே கொள்ளப்படுகிறது. ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழ்கின்ற வேறுபட்ட இன, மத, மொழி, பிரதேச பிரிவுகளுக்கிடையே பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற, முரண்பாடுகள் இல்லாத இணக்கப்பாடுடனான உறவு முறையைக் கொண்ட அம்சத்தினைக் குறிப்பதாகும். அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அடிப்படைகளிலும் நிர்வாகக் கட்டமைப்பு முறையிலும் காணப்படுகின்ற ஒருமைப்பாட்டைக் குறிப்பதாகும். இதனை Myron Weiner இன் ஐந்து வகையான வரையறையை புரிந்து கொள்வதன் ஊடாக அளவீடு செய்து கொள்ளலாம்.[1] அரசியல் மட்டத்தில்காணப்படும் தேசிய ஒருமைப்பாடு சமூக மட்டத்திலும் பொருளாதாரத்தளத்திலும் செல்வாக்குச் செலுத்தும் ஓரம்ச எண்ணக்கருவாக விளங்குகின்றது. அவற்றை விரிவாக நோக்குவோம்.

## I) தேசிய ஒருமைப்பாடு (National integration)

தேசிய ஒருமைப்பாடு என்பது தனியான பிரதேச அலகுக்குள் வாழ்கின்ற வெவ்வேறுபட்ட குழுக்கள் தமது சமூக, கலாசார ஒருமைப்பாட்டின் தொடர்ச்சியை பேணுவதும் வளர்ப்பதுமாக உள்ளதை குறிப்பதுடன். தமது தேசிய அடையாளத்தை ஸ்தாபிப்பதுமாக அமைந்துள்ளது.[2] பொதுவாக இவ்விடயம் பற்றி இன அடிப்படையிலான பன்மைச் சமூகத்தை குறிப்பிடுவதாகவே அதன் சொற்பிரயோகங்கள் அமைந்திருக்கின்றன. இலங்கையை பொறுத்தவரையில் பல்லின சமூக அமைப்பை அரசியல் நிறுவன கட்டமைப்புக்குள்ளோ அல்லது நிர்வாகக் கட்டமைப்புக்குள்ளோ ஏற்பட்டிருந்ததென முற்றாகக் கூறிவிட முடியாது. பல்லின அரசியல் அமைப்பைக் கூட உருவாக்க முடியாத சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் அமைப்பும் அது சார்ந்த நடைமுறைப் போக்கும் முரண்பாட்டு அரசியல் கலாசாரத்தை அதீதமாக வளர்த்ததென்றே கூறலாம்.

சிங்கள பௌத்த ஆட்சியாளர்களும், சிங்கள புத்திஜீவிகளும் சிங்கள ஊடகங்களுக் கூடாக தேசிய ஒருமைப்பாட்டை உடைப்பதற் கான வழிமுறைகளை வெளிப்படுத்தி வந்தன. இதன் ஆரம்பம் சுதந்திரத்திற்குப் பின்பானது என அரசியல் வரலாற்றை ஆராய்பவர்கள் குறிப்பிட்டாலும் அது ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிலைபெற்றிருந்த போதே ஆரம்பித்துவிட்டது எனலாம். ஒருவகையில் பிரித்தானியரே இனமுரண்பாட்டிற்கான ஒரு காலகட்டப் பரிமாணத்திற்கு உந்துசக்திகளாகத் திகழ்ந்தனர் எனக்கூறுதல் மிகையாகாது.[3] பிரித்தானியரின் அல்லது ஐரோப்பியரின் வருகை நிகழ்ந்த போது இலங்கை பல இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுகை செய்யப்பட்ட வரலாற்றை நினைவிற் கொள்வது பொருத்தமானது. ஆனால் பிரித்தானியரே தமது அரசியல் பொருளாதார இராணுவ நலன்களை அடைவதற்காக பல்லின அரசியல் சமூகம் பற்றிய பரிமாணத்தை இலங்கையில் ஆரம்பித்தனர். அத்தகைய பல்லின அரசமைப்பு ஓர் இயந்திரமயப்பட்ட ஒன்றிணைப்பாகவே அமைந்திருந்தது.

## II) பிரதேச ஒருமைப்பாடு (Territorial integration)

பிரதேச ஒருமைப்பாடு என்பது ஒரு நாட்டில் அல்லது அரசியல் பிராந்திய

எல்லைக்குள் வாழும் மக்கள் தேசிய மத்திய அதிகாரத்தின் வளர்ச்சியால் தமது அரசியல் பகுதியோ அல்லது பிராந்தியமோ ஆக்கிரமிக் கப்படுகின்றது அல்லது கீழ்நிலைப்படுத்தப் படுகின்றது என்ற முரண்பாட்டை உணராமல் தமது கடமைக் கூறுகளை ஆற்றுவதைக் குறிப்பதாகும்.[4] பிரதேச ஒருமைப்பாட்டின் வளர்ச்சியானது தனித்துவமான, வேறுபட்ட துமான சமூகப்பிரிவுகள் அல்லது வரலாற்று ரீதியான முரண்பாடுடைய அரசியல் பிரிவுகள் தேசியத்தை நோக்கிய நகர்வுக்கான உணர்வு நிலையைக் குறிப்பிடுவதாகவும் கொள்ள முடியும். இலங்கையின் அரசியல் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் பிரதேச ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் உணர்வு ரீதியானவளர்ச்சியை தமிழ், சிங்கள முஸ்லிம் இனங்கள் மத்தியில் அரசாங்கத்தினாலோ கட்சிகளாலோ ஏற்படுத்த முடியவில்லை. மாறாக தமிழர்களின் பிரதேசங் களின் மீது சிங்கள ஆட்சியாளர்கள் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண் டதுடன் குடியேற்றங்களை ஆரம்பித்து அஞ்ஞாடாக பாரம்பரிய தமிழர் தாயகத்தை உடைக்க முயன்றனர்.[5] (Traditional homeland) இதனால் ஏற்பட்ட நெருக்கடி தமிழ் சிங்கள இன முரண்பாட்டுக்கும் அதன் இயல்பான உடன்பாட்டுப் போக்குகளுக்கும் ஆபத்தானதாகவும் அமைந்தது. நிலம் மீதான ஆக்கிரமிப்பென்பது தமிழர்களின் வாழ்வுரி மையை நிராகரிப்பதாகவே அமைந்திருந்தது. குறிப்பாக கிழக்கு மாகாணமே அதிகமான பாதிப்பை அடைந்ததுடன் வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் அரசியல் தந்திரத்தை பிரதேச ஒருமைப்பாட்டுக்கு எதிரான சுலோகமாக சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் பின்பற்றினர்.

### III) ஆட்சிசெய்யும் உயர்குழாமுக்கும் – மக்களுக்குமான ஒருமைப்பாடு (Governing Elite - Mass integration)

இது அரசாங்கத்திற்கும் ஆட்சிக்குமான பிணக்கின் தொடர்பைக் குறிப்பது. அரசியல் முறைமை பற்றிய வேறுபட்ட விருப்புக்களைக் கொண்ட விழுமியமுடைய மக்களின் இணைப்பை உருவாக்குவது. இவ்விழுமிய வேறுபாடுகள் அதே மக்களை இல்லாமல் செய்வதோடு ஒருமைப்பாடு அற்ற அல்லது ஒருமைப்பாட்டுக்கான நீண்ட இடைவெளியை ஏற்படுத்துவதையும் காணலாம். ஆளுபவர் களும் அதன் ஆட்சியும் இதர விழுமியத் தையுடைய மக்களின் ஆட்சியுரிமையை அங்கீகரிக்க நீண்ட காலம் எடுக்கும். உயர் வர்க்கத்தையும் மக்களையும் இணைக்கும் முயற்சிக்குத் தடையாக அதிகாரமும் அதன் அபிவிருத்தியுமே விளங்குகிறது.[6] இதில் ஏற்பட்ட அபிவிருத்திகள் இலங்கை மக்களின் ஒருமைப்பாட்டை பாதித்ததுடன் முரண்பாட்டை கூர்மைப்படுத்தியுள்ளது. சிங்கள உயர்குழாம் தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக தமிழர் மீதான ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்ற துடன் அதனைப் பாமர சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்த இனவாதக் கருத்துக்களைப் பரப்பின. அதனால் சிங்களப் பெரும்பான்மை மக்கள் தமிழ் மக்கள் மீது உயர்குழாமினர் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சாதாரண சிங்களமக்களும் நியாயமெனகருதி தமிழர்களின் அரசியல் தனித்துவங்களை எதிர்க்க முனைந்தனர்.

ஆட்சி செய்யும் உயர்குழாம் – மக்கள் உறவானது தனித்து சிக்கள – தமிழ் முரண்பாட் டை மட்டும் ஏற்படுத்தாமல் நிரந்தரமாகவே தமிழ் உயர்குழாம் முரண்பாட்டையும் கூர்மைப்படுத்தத்

தவறவில்லை. இதனால் முரண்பாடு என்பது உயர்குழாமிற்கும் – சிங்கள வெகுஜனங் களிற்கும் – தமிழ்மக்களிற்குமான முரண்பாடாக மாறியது. இதனால் ஒட்டு மொத்தமான இன ஒற்றுமையும் தேசியஒருமைப்பாடும் தகர்ந்தது.

## IV) விழுமிய ஒருமைப்பாடு (Value integration)

மிகத் தாழ்ந்த நிலையில் சமூகம் ஒன்றின் ஒழுங்கை பேணிக்கொள்வதில் விழுமிய உடன்பாட்டுக் காரணிக்கு முக்கிய பங்குண்டு.[7] விழுமியம் முடிவற்ற தொடர்ச்சியான தொன்றா கும். விழுமியத் தொடர்ச்சி ஒழுங்கு முறையான கூட்டுவலுவை வெளிப்படுத்துவது, இலக்கை அடைவது, முரண்பாட்டைத் தீர்ப்பது எனப் பல பொருள்பட விழுமியத்தைக் கொள்வது இயல்பானதாகும். எதுவாகினும் இலங்கையில் காணப்படும் விழுமிய ஒருமைப்பாடானது இரு சமூகங்களுக்கிடையிலான முரண்பாட்டை வளர்த்ததோடு பகைமையைத் தூண்டுகின்ற காரணியாகவும் அமைந்திருந்தது. விழுமிய ஒருமைப்பாடு தமிழ் சமூகத்திற்குத் தனித்துவமானதாகவும் சிங்கள சமூகத்திற்குத் தனித்துவமானதாகவும் ஒழுங்கு படுத்தப்பட்ட தோடு சிங்கள விழுமியங்கள் தமிழ் சமூகத்தின் விழுமியங்களை அழிவுக்குள்ளாக்கும் வேலையில் ஈடுபட்டன. இதனால் இலங்கை யென்ற ஓர் அரசமைப்புக்குள் வேறுபாடுடைய இனங்கள் தமக்குள் ஏற்படுத்த வேண்டிய ஒருமைப்பாட்டிற்குப் பதிலாக தனித்தனி விழுமியக் கோட்பாடுகளை வடிவமைத்து வளர்த்தன. இது இரண்டு அரசுகளை நோக்கிய கோட்பாட்டுக்கு வழியமைத்தது.

## V) நடத்தைசார் ஒருமைப்பாடு (Behavi ural integration)

தகமையுடைய மக்கள் கூட்டம் பொது இலக்குக்கான அல்லது பொது எண்ணப்பாங் குடன் சமூகத்தின் ஒழுங்கமைப்பை நடத்தை சார் நிலையில் ஒன்றிணைத்துக் கொள்வதனை குறிப்பதாகும். சில சமூகங்களில் உயர்குழாத் தின் ஆதிக்கமும் செல்வாக்கும் மேலோங்கியிரு ப்பதுடன் பொது நடத்தையினை ஏற்படுத்து கின்ற நோக்கோடு செயல்படுபவர்களாகவும் காணப்பட்டாலும் பிறசமூகங்களை நசுக்குவ தும் சுரண்டுவதும் மேலோங்கி இருப்பதனை அவதானிக்க முடிகின்றது.[8] அரசியல் சமூகம் ஒன்றின் பிரஜைகள் கூட்டான வெளிப்பாடு களைக் கொண்டிருக்க வாய்ப்பில்லாத போது பொது நோக்குக்காக ஒன்றிணைகின்ற தன்மை காணப்படவேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இலங்கை மக்களில் தமிழர், முஸ்லிம்கள் பற்றிய முரண்பாடுகளை முழுமையான நாட்டுக்குரித்தான முரண்பாடாக கருதியபோதும், அதற்கான தீர்வில் பொது இணக்கப்பாட்டுக்கு பெரும்பான்மை சிங்கள மக்கள் வரமறுக்கின்ற நிலைகாணப் படுகின்றது. அதனை உயர் குழாமினர் தூண்டுவதுடன் சிங்கள மக்களின் அரசியல் நடத்தையில் தமிழர் மீதான வெறுப்புணர்வு ஊட்டப்படுகின்ற நிலை ஒருமைப்பாடு உடைவதற்கு காரணமாக அமைந்தது.

### தேசிய ஒருமைப்பாடும் சமாதானமும்

இலங்கை அரசியல், பொருளாதார சமூக புவியியல் மட்டத்தில் இரு தேசியங்கள் கொண்ட நாடு என்ற கோட்பாடு 1983 இனக்கலவரத் திற்கு பின்னர் படிப்படியாக வளர்ந்து

வருகின்றது. தமிழர், சிங்களவர் என்ற இன வேறுபாடு இலங்கைத்தேசீய இனம் என்ற கோட்பாட்டைத் தகர்த்து இருதேசீய இனங்களின் நாடு என்ற நிலையை உருவாக்கியுள்ளது. இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் சிங்கள பெரும்பான்மையின் அரசியல் தலைமைகளின் திட்டமிட்ட தமிழின விரோதப்போக்கும் அசௌகரியமான, அறிவின்மையான அரசியல் (Ignorent Politics) அணுகுமுறைகளுமே முழுமையான காரணிகளாக கொள்ளலாம்.[9] பல தடவை சமாதான உடன்படிக்கைகள், தீர்வுத்திட்டங்கள் என்பன சிங்கள அரசியல் தரப்பால் முன்வைக்கப்பட்டு அதே பெரும்பான்மை எதிர்த்தரப்பால் நிராகரிக்கப் பட்டு கைவிடப் பட்டன. ஆனால் இருதரப்பும் மூன்றாவது பிராந்திய சக்தியான இந்தியாவை ஈடுபடுத்தி செய்த இலங்கை, இந்திய சமாதான உடன்படிக்கையும் அமுலாக்கம் இன்றி கைவிடப் பட்டுள்ளது. வட– கிழக்கு மாகாணம் தவிர்ந்து ஏனைய மாகாண சபைகள் இயங்கினாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. இதேபோன்று 2001ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட போர் நிறுத்த உடன்பாட்டை அடுத்து நோர்வேயின் மத்தியஸ்தம் இலங்கையில் சமாதானத்தை சாத்தியப்படுத்த முயன்றுள்ளது. இச்சமாதானம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையுடன் ஆரம்பித்து ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகளுமே சாத்தியமானது. ஆறுகட்டப் பேச்சுவார்த்தைகளிலும், சமாதானம் எப்படி நகர்த்தப்பட்டது என்பதை விரிவாக நோக்குவோம்.

### சமாதானத்தின் மறுபக்கம்

சமாதானத்தின் அரசியலானது பேச்சுவார்த்தையாகவே காணப்பட்டது. ஆனால் சமாதான அடிப்படையில் ஒரு சுமூகமான தீர்வை நோக்கிய நகர்வில் சிறிலங்கா தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஏறக்குறைய சமமான அழுத்தங்களுக்குள் உள்ளாக்கப்பட்டிருந்தன. சிறிலங்கா தரப்பில் ஜனாதிபதி சத்திரிக்கா தலைமையிலான முன்னய அரசாங்கம் எதிர்கொண்ட போர் நெருக்கடிகளும் தென் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட படுமோசமான பாதிப்புகளும் சர்வதேச நாடுகளின் பொருளாதார உதவி தொடர்பான அழுத்தங்களும் ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டதுடன் புதிய அரசாங்கம் சமாதான பேச்சுக்களை தேர்தல் யுக்தியாக பயன்படுத்தியது. இதே போன்று தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச பயங்கரவாதம் என்ற மேற்கின் திரிபுபடுத்தப் பட்ட உபாயத்தையும் வடக்கு கிழக்கில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியையும் கருத்தில் கொண்டு தென் இலங்கையின் அமைதி அரசியல் சக்தியோடு புரிந்துணர்வுக்கு இணங்கின[10]. இருதரப்பு சமாதானம் என்ற விடயத்தில் சம அந்தஸ்துடைய சக்திகளாக மதிக்கப்பட்டதுடன் தமது மக்கள் சார்ந்த நலன்களுக்காக ஒருமைப்பாடடைந்தனர். அதாவது சமாதானம் மிக நீண்ட காலம் விலகியிருந்த பிரதேசங்களை ஒன்றிணைக்க முயன்றதுடன் தீர்வுக்கான அணுகுமுறைகளையும் ஆரம்பித்தன.

ஆறுகட்டமாக நிகழ்ந்த பேச்சுக்களிலும் புரிந்துணர்வு உடன்பாட்டிலும் வட கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை, வடகிழக்கு பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியமர்வு, உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து படைகளை விலக்குதல், புனர்வாழ்வு புனரமைப்பு போன்ற விடயங்களை மையப்படுத்தியதாக அமைந்தது.[11] பேச்சுகள் எல்லாவற்றிலும் பல உப குழுக்கள்

அமைக்கப்பட்டு தீர்வுக்கு முந்தைய இயல்புத்தன்மைகளை ஒழுங்குபடுத்த முயன்றன. ஆனால் எடுக்கப்பட்ட எந்த முடிவுகளையும் அமுல்படுத்தாது மீண்டும் அசௌகரிமான அரசியல் நகர்வு நிகழ்ந்து வந்தது. நோர்வேயின் அனுசரணையுடன் செய்யப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் சிறிலங்கா அரச தரப்பு ஏமாற்றமளிக்கும் நடவடிக்கையை தொடர்ந்தது. அதாவது ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கம் முன்னாள் சிங்கள தலைவர்களைப் போன்று தந்திரமாக சமாதான காலத்தை பயன்படுத்தி[12] தமிழ் மக்களையும், அதன் அரசியல் தலைமையையும் ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இந்தியா, அமெரிக்கா என்ற இரண்டு பிரதான பிராந்திய, சர்வதேச சக்திகளுக்கிடையில் இலங்கைத் தமிழரின் பிரச்சினையை ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் கையாள ஆரம்பித்தது. தென் இலங்கைக்கு ஏற்பட்ட நிதிப்பிரச்சினையை மேற்குலகம் சமாதானத்தோடு இணைத்ததனால் சமாதான அரசியல் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டது. ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவை தாயாபண்ணி அமெரிக்காவுடன் கொண்டிருந்த நெருக்கமும், யப்பானியர் மற்றும் நோர்வேயினரின் அமெரிக்கா சார்புப் போக்கும் சமாதானத்தை நெருக்கடிக்குள் ஒருபக்கமாக இட்டுச் சென்றது. நிதிதொடர்பான பூர்வாங்க அமெரிக்க மகாநாடும் இலங்கை அரசுக்கான நிதி உதவிக்கான யப்பானிய மகாநாடும் விடுதலைப்புலிகள் தரப்பை நிராகரிக்கும் நடவடிக்கையாக அமைந்தது.[13] இதில் மேற்குலகம் மட்டுமன்றி இந்தியாவும் ரணில்விக்கிரமசிங்காவும் கணிசமான பங்கெடுத்துக் கொண்டனர். இதனால் பேச்சுவார்த்தை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இதே சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளும், ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கமும் இடைக்கால அதிகாரம் வடக்கு கிழக்கிற்கு கைமாற்றுவது பற்றி நீண்ட கலந்துரையாடலை பேச்சுக்களில் கவனம் கொண்டாலும் அதன்பின்னர் ரணில் அரசாங்கம் மிகப் பலவீனமான அதிகாரப்பரவலாக்கலைக் கொண்ட இடைக்கால அதிகாரசபை (Apex Council) ஒன்றை முன்வைத்தது.[14] அதனை முற்றாக நிராகரித்த தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச மட்டத்தில் முரண்பாடு தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைக்கு ஒப்பான ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (ISGA) யை முன்வைத்தனர்.[15] அதற்கு தென் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஆரோக்கியமான விமர்சனம் முன்வைக்கப்படாத நிலையில் இந்தியா இடைக்கால தன்னாட்சி வரைபை முற்றாக நிராகரிக்க, அமெரிக்க சமஸ்டிக்கான வரைபின் எல்லையை தாண்டிவிட்டது இவ்வரைபு எனக்கூறி நிலைமையை மூன்று தரப்பும் பயனற்ற விதத்தில் கையாண்டன. இச்சந்தர்ப்பத்தில் தென்இலங்கை அரசியல் சக்திகளிடையே அதிகாரப்போட்டி ஏற்பட்டதுடன் விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால அதிகார சபையை ரணில் அரசாங்கம் வழங்கப்போகிறதென்ற பொய்ப்பிரச்சாரத்துடன் ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்ததும், சமாதானத்தின் மறுபக்கமும் குழப்பத்திற்குள்ளாகியது. புதிய அரசாங்கம் சமாதானத்திற்கும், புரிந்துணர்வுக்கும் எதிரானதாக விளங்கியபோதும் போர் நிறுத்தத்தை மட்டுமே தொடர்ந்து கடைப்பிடிக்க விரும்புகின்றது. புதிய அரசும் ரணில் விக்கிரமசிங்கா போன்று தந்திரமான அரசியலையே கையாள திட்டமிடுகின்றது. இதற்கு இந்தியா, அமெரிக்கா, மற்றும்

ஏனைய மேற்கு சக்திகளும் அத்தகைய தந்திரத்தை பிரயோகித்து தமிழரை ஓரங்கட்ட திட்டமிடுகின்றமை புலனாகின்றது.

### ஆபத்தான பாதையில் இலங்கை

தேசிய ஒற்றுமை சமாதான முயற்சியில் முன்னெடுக்கப்பட்டாலும் அரசியல் தந்திரங்க ளால் ஒருமைப்பாடற்ற போக்கே வளருகின்றது. முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியையே தமது தாய் மொழியாகக் கொண்டாலும் மத அடிப்படையில் மூன்றாம் தரப்பாகவே சிறிலங்கா அரசும், ஏனைய சக்திகளும் கருதி தமிழ் முஸ்லிம் முரண்பாட்டை தூண்டுகின்றன. இலங்கையின் இனப்பிரச்சினை மத அடிப்படையிலான ஒன்றல்ல. வடக்கையும் கிழக்கையும் பிரதேச அடிப்படையில் ஒன்றாக இருக்கக் கூடாதென வலியுறுத்தும் சக்திகள் முழு நாட்டிலும் பிரதேச முரண்பாடுகளை தூண்டி ஒருமைப்பாட்டைக் குலைக்க விரும்புகின்றமை புலனாகின்றது. இலங்கை இனப்பிரச்சினையை அரசியல் ஆக்கும் தென் இலங்கை அரசியல் கட்சிகளும், பௌத்த பிரிவுகளும் சமாதானத்திற்கு விரோதமாக செயற்படுகின்றன. தமிழ்தரப்பால் முன்வைக்கப்பட்ட முதலாவது இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபுக்கு அரசியல் சக்திகள் என்ற வகையில் எந்த பதிலையும் முன்வைக்காத " சிங்கள அரசியல் தலைமைகள் எப்படி சமாதானத்தை நிலைநாட்டப்போகின் றன என்பது பிரதான கேள்வியாகும். உலக நாடுகளின் அளவுக்கதிகமான தலையீடும் செல்வாக்கும் சமாதானத்தை பாதிக்க வைத்திருப்பதுடன் தீர்வை நோக்கிய எந்த தரப்பும் செயல்படவில்லை என்பதையே கடந்த சமாதான காலம் உணர்த்தி நிற்கின்றது.

சமாதானம் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அவசியமானது. உடையும் தறுவாயில் இருந்த இலங்கையை ஐக்கியப்படுத்தியது சமாதானமாகும். ஆனால் இச்சமாதானம் விசுவாசத்துடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் ஆற்றப்படவேண்டியது. உலகளாவிய மட்டத்தில் முரண்பாடுகளை தீர்த்த பின்னர் காணப்பட்ட அரசுகளின் அரசியல் நிலைமைகளை தெளிவாக மதிப்பீடு செய்து அவற்றை அமுல்படுத்த வேண்டும்." முதலில் அரச தரப்பு நிறைவேற்ற வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் வேண்டும். தமிழர்களின் இயல்பு வாழ்க்கை கடந்த இரண்டரை வருடங்களாக தீர்க்கப்படாத நிலையிலும் சமாதானம் போர் நிறுத்த உடன்பாட்டின் சார்பாக சாத்தியப்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமே சமாதானம் என கருதமுடியாது. சமாதானத்திற்கான பாதை நீண்டதாகவும் அமுலாக்கவேண்டியதுமான அதிக சிக்கல்களை கொண்டிருக்கின்றது. இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு சமாதானம் அவசியம் என்பதற்கு போர் வெற்றி பெற முடியாத முடிவிலி என்பதையும் கவனித்தல் வேண்டும். யூகோசிலாவியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் முரண்பாட் டுக்கு பின்னான எத்தகைய ஆயத்தமும் இலங்கையில் இல்லை " என்பதை புத்திஜீவிகள் யாரும் மறுக்கமுடியாது.

### முடிவுரை

கடந்த காலங்களில் முரண்பாட்டை தூண்டிய சிங்களப் பெரும்பான்மைத்தரப்பு அதிக விட்டுக்கொடுப்புகளையும் தியாகங்களையும் செய்யுமாயின் சமாதானம் தீர்வுக்கு வழிவகுக்கும். அதனால் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படும். கடந்த இருபதாண்டுகள் போருக்கான அரசியல் வரலாறு போரினால் தேசிய ஒருமைப்பாட்டை

வளர்க்க முடியாதென் பதை நிறுவியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கத்தைப் போன்று பலமான நிர்வாக இயந்திரத்தையும் நீதிநிர்வாக அமைப்பையும் மற்றும் இராணுவ கடற்படை கட்டமைப்பையும் கொண்டிருக்கும் தமிழர்சார்பு நிலை ஆட்சியை உருவாக்கி வருகின்றனர். இதன் போக்கு இறைமை கொண்ட அரசமைப்பு முறைமைக்கு ஒப்பானது. எனவே தமிழர் பிரிந்து தனி அரசமைப்பதை தவிர்ப்பதற்கு நிரந்தரமான நியாயாதிக்கம் உடைய பக்கச்சார்பற்ற சமாதானம் அவசியம். அத்தகைய பாரபட்சமற்ற சமாதானத்தினாலேயே இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்க முடியும். அரசியல் அமைப்பிலும் அதன் அமுலாக்கத்திலும் தெளிவான மாற்றத்தினை ஏற்படுத்துவதும் தமிழ் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய கோட்பாட்டை அங்கீகரிப்பதுமே ஒருமைப்பாட்டிற்கு சாதகமான வழிமுறையாக அமையும்.

## அடிக்குறிப்புக்கள்

01. James Manor, The "*Dynamics of Political integration and Disintegration*" A.J.Wilson and D.Dattian, (Eds) **The Studies of South Asia, Problems of National Integration.** C.Hurst and Co. London 1982, pp. 89-109
02. *Ibid.* p.90
03. Prof. K.M.de silva (Ed) **History of Ceylon,** University of Ceylon, Vol. III, 1973, p.112.
04. James Manor : p.89
05. Major Shankar Bhaduri, Major General Afsir Karim and Lieutenat General Mathew Thomas; (Eds) **The Sri Lankan Crisis** ; Lancer International, India 1990, pp 12-14
06. James Manor : p.89
07. *Ibid*, p.94
08. *Ibid,* p.89
09. Jayadeva Uyangoda and Marine Perera; (Eds), **Sri Lanka's Peace Process-2002 Cretical Perspectives**, Social Scientists Association in Colombo, 2003, p.117
10. *Ibid* : p : 118
11. Tyrol ferdinands. & others , "*Sri Lanka's Peace Process Towards Phasell*", **Polity Pravada**, PP 14 - 18
12. a) Jayadeva Uyangoda : "*Peace watch*", **Polity Pravada** Vol. I, No.6

March-April 2004 p-6

b) '*Ranil Wickremesinghe's Speech in Tokyo; A magnificent collective pledge of support*'. **Tamil Times**; 15 June 2003, Vol .XXII, No. 6, pp.8 - 9

13. a) Jeyaraj,D.B.S.- "*Takyo Donor conference and the LTTE Response*" : **Tamil Times** 15 June 2003, Vol XXII, No.6,pp.15 - 16

    b) "*Tigers not bound by Tokyo Declaration Say's LTTE*", p.9

14. Devanesan Nesiah; "*The Proposed Interiam Self - governing Authority*" ; **Polity** Vol. I No. 5 January - February 2004, pp.,20 - 23

15. Jeyadeva Uyangoda : "*Peace Watch*": **Polity**, Vol. 2 May - June 2004, p.7

16. Tyrol ferdinands & others; "*Sri Lanka's Peace Process at Crossroads : Lessons. Opportunities and Ideas for Principle Negotiation of Conflict Transformation*" ; January 2004. (Unpublised.)

17. Preben Johkinnessen, Jayatilleke, S.Bandra and Christine Smity; "*Forward process of Conflict Analysis, An application to the Sri Lankan Conflict*" presention at the **9 th International Conference on Sri Lankan Studies,** 28-30 th November 2003 Sri Lanka (Un published)

18. Prof Thomas Fleiner & others "*Constitutional Reorganization of the Federal Republic of Yugoslavia*", 30th November 2003 (Un published) p.10